முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1401

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.07.2023**, திங்கட்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞான கீர்த்திகொண்ட தேசிகா வாழ்க
தானதர்மத்தின் மகா சக்தியே வாழ்கவாழ்க
தர்மனே தவராஜனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 15 ம் நாள், 31.07.2023, திங்கட்கிழமை)
உயர்வுபட அரங்கன் சக்தி பெருக உரைப்பேன்
ஞானம்பட அரங்கன் வழி உலக மக்கள்
ஞானிகளாகும் அற்புதம் நிகழ இருக்க
3. இருக்கவே கலியுக மக்களெல்லாம்
ஏற்று அரங்கன் திருவடி பற்றி
ஞானம் வேண்டி ஓங்காரக்குடில் நோக்கி
ஞாலமதில் முழுமதிகாலமெல்லாம் வந்துசெல்ல
4. செல்லவே நன்மைகள் கூடுமப்பா
சிறப்பான மாற்றங்களும் நாடுமப்பா
வல்லமைபட அரங்கனுள் யானிருந்து
வரம் தந்து வருதல் காண
5. காணவே கலியுக மக்கள்
கந்தா கடம்பா அரங்கா முருகா என வேண்டி
ஞானமோடு கலியுக மக்கள்
நம்பிக்கை வைத்து அரங்கன் திருவடி பற்றி
6. ஞானம் பயில தீட்சை ஏற்க
ஞானிகள் பல்வேறு சூட்சுமமாக
குருவாக இறங்கி அவரவர்க்கும் ஆக்கமுடன் பிறவித்தொடர்பு வழி
அனைத்து குருமார்களும் வழிகாட்டி இடரின்றி இந்த உலகில்

7. இனிதே அரங்கன் வழி உலகோர்
இணையிலா ஞானிகளாக மாற்றம் கண்டு
அற்புதம்பட உலக மாற்றம்
அரங்கன் சேவையாக நடந்தேறக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–